# லட்சுமி தீபம்





அமரர்

## திருமதி. பத்மநாதன் அன்னலட்சுமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்து

வெளியிடப்பெற்ற

# நினைவு அமுதம்

27.04.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# லட்சுமி தீபம்



இல.103/1, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் திருமதி

# பத்மநாதன் அன்னலட்சுமி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு அமுதம்

27.04.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



**"துறந்தார் பெருமை துணைக்கூறின்<br>வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று"**

**அன்னத்தின் பொற்பாதங்களுக்கு !**

ஐயிரண்டு திங்கள் சுமந்து எமைப்பெற்றெடுத்து<br>
பேர்கொடுத்து எம்மை ஆளாக்கி<br>
இவ்வுலகில் மேன்மையுற நாம் வாழ வழி வகுத்து<br>
பாசத்தில் எம்மைக் குளிப்பாட்டி<br>
நெஞ்சம் நிறைந்த நேசத்தை எமக்களித்து<br>
எம் மேன்மை கண்டு இன்புற்று<br>
இன்னமும் சில காலம் எம்மோடிருப்பீர்கள்<br>
என்றே நாம் இன்புற்றிருந்த வேளைதனில்<br>
வாழ்ந்தது போதுமென்று – நல்லூரான் பாதமதில்<br>
இளைப்பாற சென்றீர்களோ அம்மா<br>
உங்கள் பிரிவு பொல்லாதம்மா<br>
அதைத் தாங்கும் இதயம் எமக்கில்லையம்மா<br>
நன் மனையாளாய் இல்லறத்தின் மாண்புதனை<br>
செப்பி நின்ற எம்தாயே, குடும்ப விளக்கே,<br>
அன்னமே, கரம் கூப்பி சிரம் தாழ்த்தி<br>
நின் பொற் பாதங்களில் – இவ் லட்சுமி தீபத்தை<br>
சமர்ப்பிக்கின்றோம்.

**103/1, கோவில் வீதி,<br>நல்லூர், யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
நல்லூரான் துணை

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்னை மடியில்
21 - 04 - 1939



ஆண்டவன் அடியில்
28 - 03 - 2019

இல.103/1, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்
# திருமதி பத்மநாதன் அன்னலட்சுமி

## அவர்களின்

## திதி வெண்பா

ஆண்டு விளம்பி பங்குனித் திங்கள் பதினாலில்
பூண்ட அபரபக்க அட்டமி திதிதனில் - அன்னை
அன்னலட்சுமி இவ்வுலகு வாழ்வுதனை நீக்கி
நல்லூரான திருவடிதனில் சேர்ந்த நன்நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே.

## தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீ புரி நல்வினை பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடுமதனாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலை ஆனால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள்புரி வாயே.

## திருவிசைப்பா

தாயில் நேர் இரங்கும் தலைவ ஓ என்றும்
தமியனேன் துணைவ ஓ என்றும்
தாயினான் இருந்து புலம்பினால் இரங்கு
நவம்புரி மாதங்கோயில்
வாயின் நேர் அரும்பு மணி முருக்கவர்
வணிகஞ் சோலை மாந்தளிர்செந்
தியின்றோ அரும்பு பெரும் பற்றப்புலியூர்
திருவளர் சிற்றம்பலமே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற் சிதையும் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகி
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி
பேதியாய் ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகி
போதியாய் நிற்கும் தில்லை பொதுநடம் போற்றி போற்றி.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இதயத்திலிருந்து...

அன்பின் ஊற்றாய் திரு அழகு நிலா குளர்முகத்துடன்

அறம் செய் அன்னையாய் மங்கையர் திலகமாய்

சிறிது பெரிது பாராமல் எவர்க்கும் இனியவராய்

சமய நெறி கண்டு வழிநடந்து எம்மிடை

வாழ்ந்து எமக்கெல்லாம் இனியவராகி சிறப்பினை நல்கி

எம் உணர்வோடு கலந்த அன்னமே தாயே

பிள்ளைகள் பற்றுள்ள பாசமுள்ள மாதாவை

பேரர்கள் பட்சமும் பாசமும் கொண்ட பாட்டிதனை

மருமக்கள் அன்புக்குரிய மரியாதைக்குரிய மாமியை

உற்றார் உறவினர் நண்பர் தங்களின் ஓர் கனதியான

பாத்திரத்தை, சௌந்தர்யத்தை இழந்தே விட்டது

இறைவனுகினியவள் இளமையில் இறைபதம் என்ற

கூற்றிற்கு இலக்கணமாய் கட்டியம் கூறி

காட்சி இனிய மாதரசியை நாம் இழந்து விட்டோம்

இன்று விண்ணவர் வரிசையில் மேலும் ஒருவராய்

இணைந்துள்ள எம் குலக் கொழுந்தே தாயே

உம் இறப் பிறப்பற்று பேரினப் பெருவாழ்விற்கு

திரிகரண சுத்தியுடன் நாளும் பிரார்த்திக்கின்றோம்

படைத்தவன் பாதமலர் வீற்றிருந்து நாளும்

எமை ஆசீர்வதிப்பீர்களாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**குடும்பத்தவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்கள் திரு.திருமதி பத்மநாதன் அன்னலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பத்மநாதன் அன்னலட்சுமி அவர்களின் வாழ்க்கைப் பதிவுகள்

இந்து சமுத்திரத்தின் முத்து என யாவராலும் போற்றப்படும் எழில் கொஞ்சும் இயற்கை வளம் நிறைந்த இலங்கையின் வடதிசை பால் சைவமும் தமிழும் கலை கலாச்சார பண்பாட்டாலும் தழைத்தோங்கிடும் சிவபூமியாய் தமிழ் மணம் பரப்பிடும் தமிழர் பூமியாய் பெருமை பெற்று விளங்குவது யாழ்ப்பாணம் ஆகும்.

இத்தகைய சிறப்பும் பெருமையும் பெற்ற யாழ் நகரில் கற்றோரும் கவிநயம் மிக்கோரும் தக்காரும் வாழ்ந்திடும் புனித பூமியாம் முருகன் அருளாட்சி புரியும் வரலாற்றுப் பெருமை மிக்க நல்லூரில் மனை மாட்சி மிக்க இல்லற வாழ்வினை நடத்திய அமரர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதிகளின் செல்லப் பிள்ளையாய் பிறந்தவர் தான் அன்னக்கா என யாவராலும் அழைக்கப்படும் திருமதி. பத்மநாதன் அன்னலட்சுமியாவார்.

அமரர் அன்னலட்சுமி அவர்கள் நல்லூரான் அருளாலே, அவன் தான் வணங்கி இறையன்பு கூடிய நற்பண்பு மிக்கவராக தன் பெற்றோருடனும் ஆசைக்கொரு அண்ணன் நாகராஜாவுடனும் ஆசைக்கொரு அக்கா நகுலேஸ்வரியுடனும் தங்கை மகேஸ்வரியுடனும் நல்லூரில் சிறப்புடன் இனிதே வாழ்ந்து வந்தார்.

அமரர் அன்னலட்சுமி அவர்கள் தன் கல்வியை நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். பாடசாலைப் பருவத்திலேயே நற்பண்பு கொண்டவராக ஆசிரியர்களின் நன்மதிப்பை பெற்றவராக விளங்கினார்.

சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதிகள் தம் பிள்ளைகள் திருமண பராயத்தை அடைந்ததும் அவர்களை திருமண பந்தத்தில் இணைத்து வைக்க விரும்பினர். அதன் பேறாக தங்களின் ஒரேயொரு மகன் நாகராஜாவை, மங்கையயற்கரசி எனும் மங்கை நல்லாளுக்கு திருமணம் செய்து மகிழ்ந்தனர். அடுத்து தங்கள் மூத்த மகள் நகுலேஸ்வரியை,நடராஜா என்பவருடன் வாழ்க்கைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தத்தில் இணைத்து மகிழ்ந்தனர். தங்கை மகேஸ்வரியை உரும்பிராயைச்சேர்ந்த தர்மலிங்கம் என்பவருக்கு மணம் செய்து வைத்தனர். இந் நிலையில் தன் செல்ல மகளான அன்னலட்சுமியை திருமண பந்தத்தில் இணைத்து வைத்திட பெற்றோர் எண்ணங் கொண்டனர்.

இதற்கமைய யாழ்ப்பாணத்தின் சப்த தீவுகளில் ஒன்றான புங்குடுதீவில் வர்த்தகத்துறையில் (யக்வெல்ல வர்த்தகர்) சிறப்புற்று விளங்கிய நடராஜா - சிவக்கொழுந்து தம்பதிகளின் மூத்த புதல்வர் பத்மநாதனை (வர்த்தகர் யக்வெல்ல யாழ்ப்பாணம்) தங்கள் மகள் அன்னலட்சுமிக்கு மணமகனாக தேர்ந்தெடுத்து இல்லற பந்தத்தில் இணைத்து மகிழ்ந்தனர்.

பத்மநாதன் - அன்னலட்சுமி ஒருமித்த மண வாழ்க்கை சீரும் சிறப்புடனும் இணைபிரியா பாசப்பிணைப்புடன் அமைந்திருந்தது. அன்றில்களென அன்புடன் நடத்திய இல்லறத்தின் நற்பயனாக செந்தமிழ்ச் செல்வி, திருநிறைச்செல்வி ,அருந்தவச் செல்வன் .பிறேமச் செல்வன்,ஜெயச் செல்வன் ,செங்கதிர்ச் செல்வி என ஆறு பிள்ளைச் செல்வங்களை கண்டு மகிழ்ந்தனர். இந் நிலையில் அன்றைய அசாதாரண சூழ்நிலை காரணமாக பத்மநாதன் அன்னலட்சுமி தம்பதியினர் தம் மக்கள் நால்வரை பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பி வைத்தனர்.மற்ற இரு மக்களையும் தம்மோடு வைத்துக் கொண்டனர்.

நன் மனைமாட்சி கண்டு தம் வாழ்க்கைப்பயணத்தை மகிழ்வோடு நடாத்தி வந்த பத்மநாதன் - அன்னலட்சுமி தம்பதிகள் உரிய வயதை அடைந்த தம் மக்களையும் திருமண பந்தத்தில் இணைத்திட விரும்பினர். அதற்கமைய தம்மூத்த மகள் செந்தமிழ்ச் செல்வியை நீர்வேலியைச் சார்ந்த சர்வலோகராஜா என்பவருக்கு திருமணம் செய்து வைத்து மகிழ்ந்தனர். இவர்களின் இல்லறத்தின் பயனாக சரணிகா எனும் ஏக புதல்வியும் சஜீவன் , சன்ஜேவன் எனும் புதல்வர்களும் உள்ளனர். பிரான்ஸ் நாட்டில் வதியும் திருநிறைச் செல்வியையும் மட்டுவிலைச் சார்ந்த தெய்வேந்திரா என்பவரையும் வாழ்க்கைப்பந்தத்தில் இணைய வைத்து மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு நிருத்திகா, ஆதித்தன், சேதுஜன் என மூன்று பிள்ளைகள் உள்ளனர். பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் அருந்தவச் செல்வன் எனும் மகனுக்கு சண்டிலிப்பாயை சார்ந்த சுகந்தி என்பவரை இல் வாழ்க்கைப் பயணத்தில் இணைத்து மகிழ்ந்தனர். இவர்களுக்கு அபிலாஸ், அபிசேக் என இரு மக்கள் உள்ளனர். பிரான்சில் வசிக்கும் மகன் பிறேமச் செல்வனை இணுவிலைச் சேர்ந்த செந்தமிழ்ச் செல்வியை வாழ்க்கைப் பந்தத்தில் சேர்த்து வைத்து மகிழ்ந்தனர். இவர்களுக்கு விதுஷன்,பிரதீசன் எனும் இரு பிள்ளைகள் உள்ளனர். பிரான்சில் வசிக்கும் மற்றைய மகன் ஜெயச்செல்வனுக்கு கொக்குவிலைச் சேர்ந்த சுகந்தினியை மணஞ் செய்து வைத்தனர். இவர்களுக்கு ஜெசாந், துசாந், சிவாணி என மூன்று பிள்ளைகள் உள்ளனர். கடைசி மகள் செங்கதிர்ச்செல்வி தன் மூத்த சகோதரியுடனும் பெற்றோருடனும் வாழ்ந்துவருகின்றார்.

அமரர் அன்னலட்சுமி அவர்கள் கணவரின் இறப்பிற்கு பின் தனது மக்களான செந்தமிழ்ச் செல்வி,செங்கதிர்ச் செல்வி பேரப்பிள்ளைகள் சரணிகா,சஜீவன் ,சஞ்ஜேவன் ஆகியோருடன் வாழ்ந்து வருங்கால தன் பேத்தியான சரணிகாவிற்கு நயினாதீவைச் சார்ந்த சிறிசங்கர் என்பவருக்கு மணஞ் செய்வித்து மகிழ்ந்தார். பிரான்ஸ்சில் வதியும் பேத்தியான நிருத்திகா,பாமாறன் என்பரை கரம் பிடித்து வாழ்க்கைப்பந்தத்தில் உள்ளார்.

வாழ்வின் சகலசௌபாக்கியங்களும் பெற்று வாழ்ந்து முதுமையின் எல்லையை தொட்ட அமரர் அன்னலட்சுமி மிகுந்த அமைதியும்,நிதானமும் ஆளுமையும் புன்னகை மாறாத வதனமும் கொண்டவர். அன்னக்கா என்று அயலவரால் அன்புடன் அழைக்கப்பட்டவர் சகலரதும் இன்பதுன்பங்களிலும் பங்குகொண்டு அல்லலுற்ற வேளைகளில் ஆறுதலளித்தவர். நாள்தோறும் அதிகாலையில் நல்லூரான் மணியோசை கேட்டு உளங்குளிர்ந்து மகிழ்ந்த அமரர் அன்னலட்சுமி அவர்கள் என்ன புண்ணியம செய்தாரோ என எண்ணும் வண்ணம் 28.03.2019 வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் நெஞ்சுக்குள் ஏதோ செய்கின்றது என்றவரை அன்னாரின் மூத்த மகள் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதித்தார்கள். ஆயினும் இரவு 11 மணியளவில் தான் இறக்கப்போகின்றேன் என்பதை அறியாமலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் உயிர் போய்விட்டது. அன்னக்கா என அழைக்கப்பட்ட அன்னம் தன் மெல்லிய நடையை நிறுத்திக் கொண்டு விட்டது. நல்லூரான் மணியோசை கேட்டு தனை மறந்த அன்னம் நல்லூரான் பாதமதில் சென்று விட்டது.

வெளிநாட்டில் வதியும் மக்களின் வருகையின் பின் 01.04.2019 அன்னாரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் இடம் பெற்று பிற்பகல் 4 மணியளவில் செம்மணி மயானம் அன்னாரின் தூலத்தை நீறாக்கியது. புனித கீரிமலைக் கடல் தூலத்தின் நீற்றை தன்னகத்தே கொண்டது. புனித பூமியாம் கீரிமலையில் 25.04.2019 வியாழக்கிழமை அந்தியேட்டி கிரியைகள் இடம்பெற்றன. 27.04.2019 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் வீட்டுக் கிரியை நடைபெற்றது. இத்துடன் அன்னலட்சுமியின் வாழ்வும் நிகழ்வும் நிறைவு பெற்றது. ஜனனம் மரணம் வாழ்வின் நியதியே அவர் தம் வாழ்வினை நிகழ்வினை நம் நெஞ்சத்தில் நீங்காப்பதிவினை ஏற்படுத்திச் சென்று விட்டார். இது தான் அவரின் வாழ்க்கைப் பதிவுகள். என்றும் அவர் தம் நிகழ்வுகளே என்றும் அழிவில்லை.

**"நெருதல் உளனொருவன் இன்றில்லை எனும்**
**பெருமையுடைத்து இவ்வுலகு"**

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**தேற்றம்**

**மந்தியென பூதமென**
**வால் சுருண்ட குக்கலென**
**மாய நிலை கொண்ட மதியே**
**வைரமணிப் பொன்னாகும்**
**வாசமனையாள் உருவும்**
**வந்த மறைநின்ற நிதியே**
**வெந்தலித்து நீறுபடும்**
**மேனியது சாகுமுன்னம்**
**வேண்டுவது நல்ல கதியே**
**மேலவரைச் சேருவதும்**
**நூலவனின் நட்புறவும்**
**விண்ணமரச் செய்யும் நிதியே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளமைத் தோற்றத்தில் அமரர் அன்னலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா எம் அருகே....

நித்திலத்தை நானிங்கு
நித்தம் நித்தம் காண்பதற்கு
நீங்கள் தந்த உயிர் கொண்டு - இன்று
நினைந்து நினைந்து வாடுகின்றோம்

துன்பத்தில் துவள்ந்து விட்டனேம்மா
துயரத்தில் துடிக்கின்றேனம்மா
சென்று விட்டீரோ எமை விட்டு
நல்லூரான் பாதமதை நாடினையோ

எம் அருகில் நீயிருந்தாயம்மா
வெளிச்ச விளக்காய் வழிகாட்டிநின்றாயம்மா
ஆயிரம் கதைகள் சொல்லி மகிழ்வித்தாயம்மா
கடமை,கண்ணியம் கட்டுப்பாடு காட்டி நின்றாயம்மா
இன்றோ எமைப் பிரிந்தது ஏனம்மா.

என்றும் உமைக் காணும் ஆசை
எம் இதயத்தில் இருந்து எழும்புகின்றதே
நின் குரலின் ஓங்கார நாதம் என்று கேட்பதோ
நின் அன்ன நடையை என்று காண்பதோ

அம்மா எம் அழுகுரல் உன் காதில் விழவில்லையா
அம்மா உங்கள் பாதம் தொட்டு கண்ணில் நீராட்டி
கலங்கிடும் எம் நெஞ்சத்தின் கனத்தினை
போக்கிட முடியவில்லையேம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா நீங்கள் தந்த நல்லவைகள்
எனக்கு கிடைத்தற்கரிய அருந்தனங்கள்
அம்மா நீ காட்டிய வழி நல்வழியம்மா
அவ் வழியே எம் பயணம் தொடருமம்மா.

அம்மா எம்மருகே நீயிருந்தாய்
இன்றோ நல்லூரான் திருவடியில் நீயிருக்கின்றாய்
ஆயினும் எம் நெஞ்சினில் என்றும் நீயிருப்பாய்
என்றுமே நின் நினைவில் தூக்கம் ஏதம்மா.

ஓம் சாந்தி



**மக்கள் :**
**செந்தமிழ்ச்செல்வி,**
**திருநிறைச்செல்வி,**
**செங்கதிர்ச்செல்வி,**
**ஜெயச்செல்வன்**

## அன்புடன் உங்களுக்கு

- சாவில் பல ஒன்றாகும் - வாழ்வில் ஒன்று பலவாகும்.
- நல்ல ஒரு மனிதனிற்கு சாவு என்பதே கிடையாது.
- வெற்றி என்பது எட்டிவிடும் தூரத்தில் இல்லை,
  அதை நாம் அடைவதென்பது விட்டுவிடும் தூரத்தில் இல்லை.
- சுகத்தினை கண்டு மகிழாதீர்கள் அது துக்கத்தினுடைய ஒருவித அலங்காரம்.
- மனிதனின் முக்கிய தேவைகள் நம்பிக்கையும் பொறுமையும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் என் இதயத்தில் ....

நானுந்தன் செல்லப்பிள்ளையம்மா
அடி வயிற்றில் சுமந்து நிலவு காட்டி
அமுதூட்டி வளர்த்தவளே அம்மா
அன்று இடியாக வந்ததே அம்மா நின் பிரிவுச் செய்தி
எமக்கென உயிர் சுமந்து நின்றாய்
மடி மீது இருத்தி இன் மொழி பேசி
எமை வாழ வைத்துப் பார்த்தவளே
நீதானே எந்தன் குடியிருந்த கோயிலம்மா
சந்திரா என அழைத்தே பாச மழை பொழிந்தே
எந்தன் தலை வருடும் நாள் எந்நாளோ
நின் பொன்னுடலைக் காண
ஓடோடி வந்தேன் நின்கடனாற்றும் பிள்ளையானேன்
வெகுதூரம் எமைப் பிரித்தம்மா - ஆயினும்
ஆண்டு தோறும் நின் அன்பு முகம் காண வந்தேனம்மா
இனியார் முகம் பார்க்க வருவேனம்மா .
ஏதுமறியா பாவியானேனம்மா
தீது அறியா செல்லப் பிள்ளை நான் தாயே
நீ எந்தன் தெய்வமம்மா - என்
இதயத்தில் என்று வீற்றிருப்பாய்.

ஓம் சாந்தி!

**மகன்**
**பிறேமச் செல்வன் (சந்திரா)**
**பிரான்ஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நின் அன்பு முகம் என்றுமே....

அம்மா ! அம்மா ! அம்மா.

தவமிருந்து ஆசையாய் பெற்ற மகன்

தலை மகன் தனித்திருந்து கதறுகின்றேனம்மா

நின் இறப்பு செய்தி கேட்டு தாங்கலையே - என் நெஞ்சே

தினந்தினம் தொலைபேசியில் நின் குரல் கேட்பேன்

இனி நின் காந்தக் குரல் கேட்பேனோ

சாப்பிட்டியா என்று நின் கணீர்க்குரலோசை

இன்றும் ரீங்காரமிடுகிறதே

நின் குரலோசை ஓயும் முன்பே - நின்

குரலை நிறுத்தியது ஏனம்மா

நின் இறுதி முகம் பார்த்து கதறியமும்

பாக்கியமும் எனக்கில்லை

நான் இருக்கும் இடத்தின் சட்டமும் இடந்தரவில்லையம்மா.

தலை மகனாய் இருந்து நின் இறுதிக் கடன் செய்யா

பாவியானேனம்மா - ஆயினும்

நின் அன்பு முகம் என்றுமே என்

நெஞ்சில் நிலைத்திருக்குமம்மா - ஆயினும்

நின் நினைவே என் சுகமம்மா.

ஓம் சாந்தி!

**தலை மகன்**
**அருந்தவச்செல்வன்**
**பிரான்ஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்காவுக்கு ....

உன் கண்ணுக்கு எட்டாது கனடாவில் வாழ்ந்த போது
உறங்கி எழு முன்னே பேரிடிச் செய்தியொன்று கேட்டேன்
துவண்டு போனேன் என் அக்காவே
நீ இறந்து விட்டாய் என்ற செய்திகேட்டு அலறுகின்றேன்
ஆதரிப்பார் யாருமின்றி
பிரிந்து போன என் அக்காவை பிறகெப்போ
காண்பேன் தவித்து வாழ்கின்றேன்
கடந்து போன வாழ்நாலை மறுபடியும் திரும்பிப் பார்க்கையில்
உறைந்து போனதக்கா என நெஞ்சு
ஆசைக்கொரு அண்ணன் இரண்டு அக்காவென்று
இறுமாப்புடன் இன்பம் பொங்க இனிதே வாழ்ந்து
பட்டுப் போகாது பாரினில் வாழ்ந்தோம் - இன்றோ
உற்ற உடன் பிறப்புகளை ஒவ்வொன்றாய் இழந்து
தனியாய் தவிக்கின்றேன் அக்கா
உற்ற துணை நீயென உறுதியுடன நானிருக்கையில்
மறைந்து போன அத்தான் வழி தேடிச் சென்றாயோ
மறைந்து சென்றாலும் மறையாது நின் நினைவே
வையத்துள் வாழ்ந்து வானுலகு சென்ற நின் ஆத்மா
நல்லூரான் அருளாலே சாந்தியடைய வேண்டி
பிரார்த்திக்கின்றேன் நின் அன்புத் தங்கை

ஓம் சாந்தி!

**சகோதரி : மகேஸ்வரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நின் பிரிவு கண்டு ....


மாமி, மாமி என வாஞ்சையுடன்
அழைத்த நின்றோம் - இனியாரை
அழைப்பதென கலங்குகின்றோம்
அன்னமென புன்னகைத்து நின்றவரே
அன்னக்கா என்றே அயலவரின் சொல்லுக்குரியவரே
மின்னாமல் முழங்காமல்
இவ்வுலக வாழ்வுதனை விட்டதேனோ
நல்லூர் முருகன் முத்தி நாடி சென்றனையே
என்று காண்போம் நின் முகம்
அன்பெல்லாம் ஒழுங்கமைந்த நின் தோற்றம்
அன்புடன் இனிதாக பழகிடும் நின் பாங்கு
வந்தோரை விருந்தோம்பும் நின் பண்பு
துயருறுவோர் துயர் துடைக்கும் நின் நெஞ்சம்
என்று காண்பதோ மாமி, மாமி
என் கடன் முடிந்தது என்றே
புவியுலகு விட்டே வானுலகு சென்றீரோ
நின் இணை பத்மநாதன் தாள் நாடினையோ
தள்ளாத வயதிலும் தளராத நின் குரலின் நாதம்
எது வந்தாலும் முன்னின்று செய்திடுவீர்
ஆளுமைக்கு எங்கள் மாமி வல்லமைக்கு எங்கள் மாமி
இன்றோ எங்களிடத்தில் நீங்களில்லை
நேற்றிருந்தார் இன்றில்லை - என்றே
வள்ளுவன் மொழி கண்டு
ஆறுதல் கண்டு எமை தேற்றுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளமைத் தோற்றத்தில்

அமரர்கள் திரு.திருமதி பத்மநாதன் அன்னலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்பார்த்து நிற்கிறோம் அம்மம்மாவை....

எங்கு சென்றீர்கள் அம்மம்மா - உமைப்
பிரிந்து பதை பதைத்து நிற்கின்றோம் - எமை
கண்ணின் இமை போல் காத்து நின்றீர் - எமை
பாடசாலை கொண்டு செல்வீர் - நாம்
வரும் வரை விழி மேல் விழி வைத்து காத்து நிற்பீர்
நாம் கல்வியில் சிறந்திட அரும்பாடுபட்டீர் - நின்
கனவுகள் நனவாகும் முன் எமைப் பிரிந்ததேனோ

நாம் ஆசைப்பட்டு கேட்கும் முன்பே - எமக்கு
விரும்பியவற்றை வாங்கித்தரும் அம்மம்மாவே
வெளியில் நாம் செல்லும் போது கவனமாக போங்கோ
வேளைக்கு வாங்கோ எனும் உன் குரலோசையை
இனி என்று கேட்போமோ - அம்மம்மா

நாம் விரும்பும் சிற்றுண்டி உணவு - நின்
கையால் செய்து தருவீர்களே அம்மம்மா - நின்
பிரிவிற்கு இரண்டு தினங்கள் முன்பே
எமக்கு விருப்பம் என்றே சம்பல் அரைத்து தந்தீர்களே
இனியார் தருவார் அம்மம்மா.

உங்கள் இறுதிக் கணம் வரை எம்முடனே
இருந்து தொலைக் காட்சியில் கிரிக்கெட் பார்த்து
எம்முடன் சிரித்து பேசி மகிழ்ந்தீர்களே - நாம்
அறிவோமா மறுகணம் காலன் உமைக் கவர்ந்திடுவான் என்றே
கண் இமைக்கும் நேரமதில் எமைப் பிரிந்தாய் அம்மம்மா
நாமோ நின் வரவு நோக்கி காத்து நிற்கிறோம் அம்மம்மா
நின் தூலம் அழிந்தாலும் நின் ஆத்மா - எமை
நினைத்து நிற்குமே.

ஓம் சாந்தி!

**பேரப்பிள்ளைகள்**
**சரணிகா – சிறிசங்கர்,**
**சஜீவன், சஞ்சய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைவினில் இருந்தாலும் நீங்காத நினைவுகளுடன்...

எங்கள் அன்பு அப்பம்மாவே , அம்மம்மாவே
உங்கள் பாசத்தை எண்ணி தவிக்கிறோம்
எந்நேரமும் எம்முடன் தொலைபேசியில் உரையாடுவீர்களே
நீங்கள் எமைக் கேட்கும் முதல் வார்த்தை சாப்பிட்டீர்களா என்பதே
எமக்கு உணவுகள் செய்து, உடைகளையும் அனுப்பி வைப்பீர்களே

வருடம் ஒருமுறை உங்களை பார்க்க ஓடோடி வருவோமே
இனி யாரை பார்ப்போம்
நாம் வந்து நிற்கும் வேளையில் எமை அன்போடு கவனிப்பீர்களே
எமக்கு பிடித்த உணவுகளைக் கேட்டு வாங்கித்தருவீர்களே
சோடா, றோல் , பீட்ஷா போன்றவற்றை வாங்கித் தருவீர்களே
நாம் இனி வரும் போது யார் அப்பம்மா இப்படி கவனிப்பார்கள்

எமை விட்டு பிரிந்து செல்ல உங்களுக்கு எப்படி மனம் வந்தது
கடைசி நாளன்றும் உம்முடன் தொலைபேசியில் கதைத்தோமே
அப்போதெல்லாம் எமை விட்டு பிரிவீர்கள் என்று
எதிர்பார்க்கவில்லையே
அம்மம்மா ஒரு கணம் நினைக்கவில்லையே அம்மம்மா

தொலைபேசி வழியே நீங்கள் எமை விட்டு பிரிந்த செய்தி கேட்டு
துடிதுடித்துப் போனோமே
நாம் வரும் போது வாசலில் வரவேற்ற உங்களை நாம் இப்போது
வரும் போது இப்போது உறங்கிய நிலையில் கண்டோமே
அம்மம்மா / அப்பம்மா......................

ஓம் சாந்தி!

**வெளிநாட்டில் இருக்கும் பேரப்பிள்ளைகள்**
**நிருத்திகா – பாமாறன்,**
**ஆதித்தன், சேதுஜன், பிரதீசன்,**
**விதுசன், அபிலாஸ், அபிஷேக்,**
**ஜெஷாந், துசாந், ஷிவாணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியாரை....

ஆசை அம்மா என்றே - அன்போடு
இனி யாரை அம்மா அழைப்போம்
பெற்றெடுத்த அன்னை போல் பெருமை கொண்ட தாய் நீ
கற்றந்த நாள் முதலாய் காண்கின்றோம்
உற்ற துணை நீயென உரிமை பல பேசிநின்றாய்
புலம் பெயர் நாட்டில் வாழ்ந்து
உற்ற உறவுகளை பார்க்க ஊர் வந்த போது
அன்னைக்கு அன்னையான உன்னை
கண்டு கழித்து மனம் மகிழ்ந்து
அன்பு மொழி பேசி ஆரத் தழுவி மனம்
நிறைந்து நின்றோம் - இன்றோ
எமை விட்டு சென்றீர் இதைத் தாங்குமா எம் இதயம்
மறந்து போகாது நின் நினைவு என்றும் நிலைத்து நிற்குமே.

ஓம் சாந்தி!

பேரமக்கள்

## சிந்திக்க சில

**ஒரு போதும் போராடாமலே இருப்பதை விட
போராடித் தோற்பது மேலானது.**

**தூக்கி எறியும் குதிரையை விட
சுமந்து செல்லும் கழுதையே மேலானது.**

**நெற்றியைக் காயப்படுத்துவதைவிட
முதுகை வளைத்துச் செல்வது நல்லது.**

**விழுவது வெட்கமல்ல
விழுந்து கிடப்பதுதான் வெட்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு அத்தைக்கு

எங்கள் ஆசை அத்தையே
உங்கள் அண்ணாவின் மூத்த பிள்ளை
நான் என்று
என்னை அரவணைத்து நிலாக் காட்டி
உணவூட்டி எனை வளர்த்த அத்தையே!

இளம் வயதில் வெளிநாடு சென்றாலும்
வந்தவுடன் உங்களை வந்து பார்ப்பேனே
சிறுவயதில் உங்களிடம் நான் கண்ட
அன்பை இப்போதும் கண்டேனே!
இனி எப்போது உங்கள் முகம் காண்பேன்.

உங்கள் அண்ணன் சென்ற இடம் நீங்களும்
சென்று விட்டீர்கள் என்ற செய்தி கேட்டு
துடித்துப் போனேன் அத்தை
உங்கள் இறுதிக்கிரியையில் கலந்து கொள்ளும்
வரம் கொடுத்த இறைவனுக்கு நன்றி சொல்லி
உங்கள் பிரிவை தாங்கிக் கொள்கின்றேன்.

அத்தையின் ஆன்மா சாந்தி அடையட்டும்!

மருமகன் :நாகராஜா பாலா

### சிந்திக்கச் சில வரிகள்

- "ஆன்மாவால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒரு போதும் எண்ணாதே"
- "உன்னால் முடிந்ததை திறமையாக செய். பின்னால் வரும் விமர்சன மழை உன்னை தாக்காமல் பார்த்துக் கொள்"
- வாழ்க்கை என்பது சந்திரன் போன்றது ஒருவேளை வெளிச்சமாகவும், மறுவேளை இருட்டாகவும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் பெரியத்தை ....

எங்கள் பெரியத்தை காலமாகி விட்டார். மனதில் ஓர் இனம்புரியாத தவிப்பு. எம் இளமைக் காலங்களில் நல்லூரிற்கு அவர் வீட்டுக்கு செல்கையில் அவருடன் கழித்த அந்த இன்பமான நாட்கள் மனதில் இன்றும் பசுமையாக உள்ளது.

நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளால் நம்மில் மூவர் நாடுவிட்டு புலம்பெயர்ந்து வாழ்கின்றோம். மற்றொருவரும் கொழும்பில் தன் வியாபார நிமித்தம் வசித்து வருகின்றார். இந்த நிலையில் நாம் எம் பெரியத்தையை கடந்த 30 வருடங்களில் சந்திப்பது மிக அரிதாகப் போய் விட்டது. இன்று அவர் காலமாகிய செய்தி அறிந்தும், புலம்பெயர் நாடுகளில் வாழும் எம்மால் எம் அன்றாட வாழ்வோட்டத்தில், அவரின் மரணச் சடங்கில் கலந்து கொள்ள முடியாததையிட்டு மனம் மிகவும் வேதனைப்பட்டது. எனினும் எங்கள் குடும்பம் சார்பில் அங்கு ஒருவராவது கலந்து கொண்டது எமக்கு ஓரளவு மனஅமைதியைத் தருகின்றது.

இறப்பு என்பது தவிர்க்க முடியாதது தான் என்றாலும் எமக்கு நெருங்கியவர், எம்மால் நேசிக்கப்பட்டவர், எம்மைச் சிறுவயதில் அரவணைத்து அன்பு காட்டியவர், ஒருவரின் இழப்பு மனதை வாட்டுகின்றது. இந்தத் தருணத்தில் அவருடன் நாம் இளமையில் கழித்த இன்பமான நாட்கள் நினைவிற்கு வருகின்றது.

எம் பெரியத்தை, எம் பெரிய மாமாவை 1958ஆம் ஆண்டில் மணமுடித்து, அவருடன் 53 வருடம் வாழ்ந்தவர். இவரின் கணவர் 2011இல் இறந்து விடவும் தன் கடைசி மகளை கண்ணும் கருத்துமாக தன்மூத்த மகளின் துணையுடன் பராமரித்து துடிப்புடன் இயங்கி வந்தவர். எம் பெரியத்தையை நினைக்கையில் அவரின் சிரித்த முகம் தான் முதலில் கண்ணிற்குள் வருகின்றது. நாம் நல்லூர் திருவிழாக் காலங்களில் அவர் வீட்டில் சென்று நின்ற நாட்கள் மிகவும் இனிமையான நாட்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எங்களுக்கு பிடித்தமான உணவுகளை சமைத்து தந்து எங்களை அன்போடு அரவணைத்து உபசரிப்பார். நாம் அங்கு சென்றால் அருகிலுள்ள சொக்கன் கடையில் வடை, போண்டா வாங்கித் தருவார். சில சமயம் அவர் விரதமிருந்தாலும் நாம் அங்கு சென்றால் எங்களுக்குப் பிடித்த அசைவ உணவுகளை சுவையுடன் ஆக்கி எங்களுக்கு பரிவுடன் பரிமாறி மகிழ்வார். எங்களையும் தன் பிள்ளைகள் போலவே எந்தவித வித்தியாசமும் பாராட்டாது அன்பு காட்டி அரவணைப்பார்.

இவர் நல்லூர் முருகன் மேல் தீராத பக்தி மிக்கவர். நல்லூர் திருவிழாக் காலங்களில் தவறாது விரதம் பிடிப்பவர். தனது 79ஆவது வயது வரை துடிப்புடன் சுறுசுறுப்புடன் இயங்கி வந்த இவர் சொல்லிக் கொள்ளாமல் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் இறைவனடி சேர்ந்து விட்டார்.

எங்கள் அன்புப் பெரிய அத்தையின் மரணச்சடங்கில் நாம் எல்லோரும் கலந்து கொள்ள முடியவில்லை என்ற ஏக்கத்தில் அவர் நினைவாக இச்செய்தியை அவரின் நினைவு மலரில் பதிய விரும்புகின்றோம்.

அவரின் ஆன்மா நல்லூர் முருகன் திருவடி நிழலில் அமைதி கண்டிட எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

ஓம் சாந்தி!ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**அன்பு மருமக்கள்**
**சிறி, ராஜா, ராணி, கலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றத்தார் ஆதங்கம்

அன்னக்கா என்றே ஆசையுடன் அழைத்து வந்தோம்
இனியாரை அழைப்போம் என்றே
நேற்றிருந்தாய் இன்றில்லை - உன்
நினைவுகள் நானிங்கு - நித்தமும்
பல சுவை தருமே
நிறைவு நின் வாழ்வு.
நின் வஞ்சமிலா ஆத்மா சாந்தி கொள்ள
கைலாச விநாயகனை நல்லூரானை
இரந்து நிற்கின்றோம் அன்னக்கா.

**சுற்றத்தவர்**
**அயலவர்கள்**

### *சிந்தனைத்துளிகள்*

- மனதில் திருப்தி இல்லாதவர்கள் என்றும் ஏழைகளே.
- மனிதனின் முக்கிய தேவைகள் நம்பிக்கையாகவும், பொறுமையும் ஆகும்.
- மனிதன் தனக்குத் தெரிந்தவற்றை மட்டும் பேசுவானாகில் உலகில் அமைதி நிலவும்.
- வாழ்க்கை என்பது சந்திரன் போன்றது ஒருவேளை வெளிச்சமாகவும், மறுவேளை இருட்டாகவும் இருக்கும்.
- அமைதியை விட மேலான மகிழ்ச்சி வேறெதுவும் இல்லை.
- அதிகம் பேசுபவர்கள் செயல்வீரர்களாக இருப்பதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கந்த சஷ்டி கவசம்



*காப்பு*

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

**குறள் வெண்பா**

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மையல் நடனஞ் செயும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க என்றுவந்து
வரவர வேலாயுதனார்! வருக!
வருக! வருக! மயிலோன்! வருக!
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல்! வருக! வருக!
வாசவன் மருகா! வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன்! வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா! வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீறிடும் வேலவன்! நித்தம் வருக!
சிரகிரி வேலவன்!சீக்கிரம் வருக!
சரவணபவனார்! சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா! நமோ நம
நிபவ சரவண! நிற நிற நிறென
வசர வணபவ! வருக! வருக!
அசுரர் குடி கெடுத்த ஐயா! வருக!
என்னையாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன்! வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற்றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளியொவ்வும்
குண்டலியாம் சிவ குகன்! தினம் வருக!
ஆறுமுகமும் அணிமுடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயிறுந்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இரு தொடை அழகும் இணை முழந்தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேஷமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)
உன் திருவடியை உறுதி என்றெண்ணும்
என் தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க்குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத்திரு பல் முனைவேல் காக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க!
என் இளங்கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேரிள முலைமார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதினாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க!
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வல்வேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க!
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க!
வரும் பகல் தன்னில் வச்ரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க! காக்க! கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக்கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ(டு) அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என் பெயர் சொல்லவும் இடி விழுந்தோடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனைதனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய் விட்டலறி மதி கெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால் கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர் வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருத்தலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீ எனக்கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குறவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துறவாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவணபவனே! சைலொளிபவனே!
திரிபுரபவனே! திகழொளிபவனே!
பரிபுரபவனே! பவமொழிபவனே!
அரி திருமருகா! அமராபதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை
இடும்பனை அழித்த இனிய வேல் முருகா!
தணிகாசலனே! சங்கரன் புதல்வா!
கதிர்காமத்துறை கதிர் வேல் முருகா!
பழநிப்பதி வாழ் பால குமாரா!
ஆவினன் குடி வாழ் அழகிய வேலா!
செந்தின் மா மலையுறும் செங்கல்வராயா!
சமராபுரி வாழ் சண்முகத்தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என் நா இருக்க யான் உனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க! வாழ்க! மயிலோன் வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க! வாழ்க! வடிவேல் வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குரு வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குற மகளுடன்
வாழ்க! வாழ்க! வாரணத் துவசம்
வாழ்க! வாழ்க! என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்ப(து) உன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளை என்றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என் மீதுன் மனம் மகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலங்கி
நேசமுடன் ஒரு நினைவதுவாகிக்
கந்தர் சஷ்டிக் கவசமிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசை மன்னர் எண்மர் சேர்ந்தங்கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர் கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தெனதுள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகை அதனால்
இருபத்தேழ்வர்க்(கு) உவந்(து) அமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத் தடுத்தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா! போற்றி!
தேவர்கள் சேனாபதியே! போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே! போற்றி!
திறமிகு திவ்விய தேகா! போற்றி!
இடும்பாயுதனே இடும்பா! போற்றி!
கடம்பா! போற்றி! கந்தா! போற்றி!
வெட்சி புனையும் வேலே! போற்றி!
உயர்கிரி கனகசபைக்கோர் அரசே!
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்!
சரணம்! சரணம்! சரவண பவ ஓம்!
சரணம்! சரணம்! சண்முகா! சரணம்!

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சித்தர் பாடல்கள்

## 1. சிவவாக்கியர்

18 சித்தர்களில் மிக முக்கியமானவர். சரியை, கிரியை (மந்திரங்கள் ஓதுவது, பூசை செய்வது) ஆகியவற்றைக் கண்டித்தவர். ஞான மார்க்கத்தையும், யோக மார்க்கத்தையும் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தியவர். நாத்திகரோ என்று எண்ணுமளவுக்கு புரட்சிக்கருத்துகளைத் தெரிவித்தவர். அவரின் பாடல்கள் பின்வருமாறு:

1. ஆன அஞ் செழுத்துள
அண்டமும் அகண்டமும்
ஆனஅஞ் செழுத்துளே
ஆதியான மூவரும்
ஆன அஞ் செழுத்துளே
அகாரமும் மகாரமும்
ஆனஅஞ் செழுத்துளே
அடங்கலாவ லுற்றவே.

2. என்னிலே இருந்த ஒன்றை யான்
அறிந்தது இல்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான்
அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றை யாவர்
காண வல்லாரோ
என்னிலே இருந்திருந்து யான்
உணர்ந்து கொண்டேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. காலை மாலை நீரில் முழுகும் அந்த மூடர்காள்
காலை மாலை நீரிலே கிடந்த தேரை என்பெரும்
காலமே எழுந்திருந்து கண்கண் மூன்றின் ஒன்றினால்
மூலமே நினைப்பிராகில் முத்தி சித்தியாகுமே.

4. சிவாயம் அஞ்செழுத்திலே
தெளிந்து தேவர் ஆகலாம்
சிவாயம் அஞ் செழுத்திலே
தெளிந்து வானம் ஆளலாம்
சிவாயம் அஞ் செழுத்திலே
தெளிந்து கொண்ட வான் பொருள்
சிவாய அஞ் செழுத்துளே
தெளிந்து கொள்ளும் உண்மையே.

5. சாம நாலு வேதமும் சகல சாத்திரங்களும்
சேமமாக ஓதிலும் சிவனை நீர் அறிகிலீர்
காமநோயை விட்டு நீர் கருத்துளே உணர்ந்தபின்
ஊமையான காயமாய் இருப்பான் எங்கள் ஈசனே!

6. தூரம் தூரம் தூரம் என்று சொல்லுவார்கள், சோம்பர்கள்
பாரும் விண்ணும் எங்குமாய்ப் பரந்த இப்பராபரம்
ஊரு நாடு காடுதேடி உழன்று தேடும் ஊமைகாள்
நேரதாக உம்முளே அறிந்துணர்ந்து நில்லுமே.

7. தங்கம் ஒன்று ரூபம் வேறு தன்மையான வாறுபோல்
செங்கண்மாலும், ஈசனும், சிறந்திருந்த தும்முளே
விங்களங்கள் பேசுவீர் விளங்குகின்ற மாந்தரே
எங்குமாகி நின்ற நாமம் இந்த நாமமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. நெருப்பை மூட்டி நெய்யை விட்டு நித்தம் நீத்தம் நீரிலே
விருப்பமோடு நீர் குளிக்கும் வேதவாக்யம் கேளுமின்
நெருப்பும் நீரும் உம்முளே நினைந்து கூற வல்லிரேல்
சுருக்கம் அற்ற சோதியை தொடர்ந்து கூடல் ஆகுமே!

9. ஓம் நமச்சிவாயமே உணர்ந்து மெய் உணர்ந்த பின்
ஓம் நமச்சிவாயமே உணர்ந்து தெய் தெளிந்தபின்
ஓம் நமச்சிவாயமே உணர்ந்து மெய் உணர்ந்தபின்
ஓம் நமச்சிவாயமே உட்கலந்து நிற்குமே!

### தேகநிலை - நமது உடல் நிலையாமை விளக்கப்படுகிறது

1. வடிவு கண்டு கொண்ட பெண்ணை மற்றொருவன் நத்தினால்
விடுவானோ அவனை முன்னர் வெட்ட வேண்டும் என்பனே
நடுவன் வந்து அழைத்தபோது நாறும் இந்த நல்லுடல்
சுடலை மட்டும் கொண்டு போயத் தோட்டிகைக் கொடுப்பரே.

2. மண்கலம் கவிழ்ந்த போது வைத்து வைத்து அடுக்குவார்
வெண்கலம் கவிழ்ந்த போது வேணும் என்று பேணுவார்
நம் கலம் கவிழ்ந்த போது நாறும் என்று போடுவார்
எண் கலந்து நின்ற மாயம் என்ன மாயம் ஈசனே!

3. நீள வீடு கட்டுறீர் நெடுங்கதவு சாத்துறீர்
வாழ வேண்டும் என்றலோ மகிழ்ந்திருந்த மாந்தரே
காலன்ஓலை வந்தபோது கையகன்று நிற்பீரே
ஆலம் உண்ட கண்டர்பாதம் அம்மை பாதம் உண்மையே!

4. வீடெடுத்த வேள்வி செய்து மெய்யினோடு பொய்யுமாய்
மாடு மக்கள் பெண்டிர் சுற்றம் என்றிருக்கும் மாந்தர்காள்
நாடு பெற்ற நடுவர் கையில் ஓலை வந்து அழைத்திடில்
ஓடு பெற்ற அவ்விலை பெறாது காண் இவ்வுடலமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஆடு நாடு தேடினும் ஆனை சேனை தேடினும்
கோடிவாசி தேடினும் குறுக்கே வந்து நிற்குமோ
ஓடி இட்ட பிச்சையும் உகந்து செய்த தர்மமும்
சாடிவிட்ட குதிரைபோல தர்மம் வந்து நிற்குமே.

6. பிறப்பதெல்லாம் இறப்பது உண்டு பேதை மக்கள் தெரிகிலாது
இறப்பது இல்லை என மகிழந்து எங்கள் உங்கள் சொத்தெனக்
குறிப்புப் பேசித் திரிவாரன்றிக் கொண்ட கோலம் என்னவோ
நிறப்பும் பொந்தி அழிந்தபோது நேமாமோ ஈசனே?

### *சாதியும் மதமும் இல்லையே*

1. பறைச்சியாவது ஏதடா பணத்தியாவது ஏதடா
இறைச்சி தோல் எலும்பினும் இலக்கமிட்டு இருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ பணத்திபோகம் வேறதோ
பறைச்சியும் பணத்தியும் பகுத்துபாரும் உம்முளே.

2. சாதியாவது எதடா? சலம் திரண்ட நீரலோ
பூதவாசல் ஒன்றலோ, பூதம் ஐந்தும் ஒன்றலோ,
காதில்வாளி, காரைகம்பி, பாடகம் பொன், ஒன்றலோ
சாதிபேதம் ஓதுகின்றதன்மை என்ன தன்மையே?

3. ஆதியானது ஒன்றுமே அநேக அநேக ரூபமாய்
சாதி பேதமாய் எழுந்து சர்வ ஜீவன் ஆனது
ஆதியோடு இருந்தது மீண்டும் எழுந்து ஜென்மம் ஆனபின்
சோதியான ஞானியாகிச் சுத்தமாய் இருப்பனே!

4. எங்கள் தேவர் உங்கள் தேவர் என்றிரண்டு தேவரோ
இங்குமங்கு மாய் இரண்டு தேவரே இருப்பரோ
அங்கும் இங்கும் ஆகி நின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ
வங்கவாரம் சொன்ன பேர்கள் வாய்ப்புழுத்து மாள்வரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஓசை உள்ள கல்லை நீர் உடைத்து இரண்டாய் செய்துமே
வாசலில் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
பூசனைக்கு வைத்த கல்லில் பூவும் நீறும் சாத்தறீர்
ஈசனுக்கு உகந்தகல் எந்தக் கல்லு சொல்லுமே?

6. ஓதும் நாலு வேதமும் உரைத்த சாஸ்திரங்களும்
பூத தத்துவங்களும் பொருந்தும் ஆகமங்களும்
சாதிபேத வன்மையும் தயங்குகின்ற நூல்களும்
பேதம் பேதம் ஆகியே பிறந்து உழன்று இருந்ததே.

7. தொண்டு செய்து நீங்களும் சூழ ஓடி மாள்கிறீர்
உண்டு உழன்று நம்முளே உற்றுணர்ந்து பார்க்கிலீர்
வண்டுளாடு சோலைசூழ் சாழும் எங்கள் நாதனும்
பண்டுபோல் நம்முளே பகுத்திருப்பன் ஈசனே.

8. புத்தகங்களை சுமந்து பொய்களை பிதற்றுவீர்
செத்திடம் பிறந்திடம் அது எங்ஙன் என்று அறிகிலீர்
அத்தனைய சித்தனை அறிந்து நோக்க வல்லிரேல்
உத்தமத் துள் ஆய சோதி உணரும் போகம் ஆகுமே.

9. காண வேண்டும் என்று நீர் கடல்மலை ஏறுவீர்
ஆணவம் அதல்லவோ அறிவில்லாத மாந்தரே
வேணும் என்றவ் வீசர்பாதம் மெய்யுளே தரிப்பிரேல்
தாணுவாக நின்ற சீவன் தான்சிவம் அதாகுமே.

10. கட்டையால் செய் தேவரும் கல்லினால் செய்தேவரும்
மட்டையால் செய் தேவரும் மஞ்சளால் செய் தேவரும்
சட்டையால் செய் தேவரும் சாணியால் செய் தேவரும்
வெட்டவெளி தன்றிமற்று வேறு தெய்வம் இல்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. யோகசாடை காட்டுவார் உயரவும் எழும்புவார்
வேகமாக அட்டசித்து வித்தை கற்று நெட்டுவார்
மோகம் கொண்டு மாதரின் மூத்திரம்பை சிக்கிப்பின்
பேயது பிடித்தவர் போல் பேருலகில் சாவரே.

12. கல்லு வெள்ளி செம்பிரும்பு காய்ந்திடும் தராக்களில்
வல்லவதேவ ரூபபேதம் அங்கமைத்துப் போற்றிடில்
தொல்லை அற்றிடப் பெரும் சுகந்தருமோ சொல்லுவீர்
இல்லை இல்லை இல்லை ஈசன் ஆணை இல்லையே.

### *யோகநிலை*

1. உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே கபாலம் ஏற்றவல்லிரேல்
விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும்
அருள் தரித்தநாதர் பாதம் அம்மை பாதம் உண்மையே.

2. அஞ்சும் மூன்றும் எட்டதாம் அநாதியான மந்திரம்
நெஞ்சிலே நினைந்து கொண்டு நூறுருக் செபிப்பிரேல்
பஞ்சமான பாதகங்கள் நூறுகோடி செய்யினும்
பஞ்சுபோல் பறக்கும் என்று நான்மறைகள் பன்னுமே.

3. செய்யதெங்கிலே இளநீர் சேர்ந்த காரணங்கள் போல்
ஐயன் வந்து என்னுளம் புகுந்து கோயில் கொண்டனன்
ஐயன் வந்து என்னுளம் புகுந்து கோயில் கொண்டபின்
வையகத்தில் மாந்தர் முன்னம் வாய் திறப்பது இல்லையே.

4. சங்கிரண்டு தாரை ஒன்று சன்னபின்னல் ஆகையால்
மங்கி மாளுதே உலகில் மானிடங்கள் எத்தனை
சங்கிரண்டையும் தவிர்த்து தாரை ஊத வல்லிரேல்
கொங்கை மங்கை பங்கரோடு கூடிவாழல் ஆகுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கரு இருந்த வாசலால் கலங்குகின்ற ஊமைகாள்
குரு இருந்து சொன்ன வார்த்தை குறித்து நோக்கவல்லிரேல்
உரு இலங்கு மேனியாகி உம்பராகி நின்ற நீர்
திரு இலங்கு மேனியாகச் சென்றுகூடல் ஆகுமே.

6. துருத்தியுண்டு கொல்லன் உண்டு சொர்ணமான சோதி யுண்டு
திருத்தமாய் மனதில் உன்னித் திகழ ஊத வல்லிரேல்
பெருத்ததூண் இலங்கியே பிழம்பதாய் விரிந்திடும்
நிறுத்தமான சோதியும் நீயும் அல்லது இல்லையே.

### *திருமாலும், சிவனும் ஒன்றெனல் சமய பேதத்தை கண்டித்தல்*

1. தில்லை நாய கன் அவன் திருவரங்கனும் அவன்
எல்லையான புவனமும் ஏக முக்தியும் அவன்
பல்லு நாவும் உள்ளபேர் பகுந்துக்கூறி மகிழுவார்
வல்லபங்கள் பேசுவார் வாய்புழுத்து மாய்வரே.

2. ஒளியதான காசி மீது வந்து தங்கு வோர்க்கெலாம்
வெளியதான சோதி மேனி விஸ்வ நாதனானவன்
தெளியுமங்கை உடன் இருந்து செப்புகின்ற தாரகம்
எளியதோர் இராம ராம ராமவிந்த நாமமே.

3. கார கார காரகார காவல் ஊழி காவலன்
போர போர போர போர போரில் நின்ற புண்ணியன்
மார மார மார மார மரங்கள் ஏழும் எய்த ஸ்ரீ
ராம ராம ராம ராம ராம என்னும் நாமமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன் நம்முடலிலுள்ளான்
## அவனை எங்கும் தேடி அலைய வேண்டாம்

1. தீர்த்தம் ஆடவேண்டுமென்று தேடுகின்ற தீனர்காள்
தீர்த்தம் ஆடல் எவ்விடம் தெரிந்து நீர் இயம்பிலீர்
தீர்த்தமாக உம்முளே தெளிந்து நீர் இருந்தபின்
தீர்த்தமாக உள்ளதும் சிவாய அஞ்செழுத்துமே.

2. மூல நாடி தன்னிலே முளைத்தெழுந்த சோதியை
நாலு நாழி உம்முளே நாடியே இருந்தபின்
பாலனாகி வாழலாம் பரப்பிரம்மம் ஆகலாம்
ஆலம் உண்ட கண்டர் ஆணை அம்மை ஆணை உண்மையே.

3. நெஞ்சிலே இருந்திருந்து நெருங்கி ஓடும் வாயுவை
அன்பினால் இருந்து நீர் அருகிருத்த வல்லிரேல்
அன்பர் கோயில் காணலாம் அகலும் எண் திசைக்குளே
தும்பி ஓடி ஓடியே சொல்லடா சுவாமியே!

4. தீர்த்தலிங்க மூர்த்தி என்று தேடி ஓடும் தீதரே
தீர்த்தலிங்கம் உள்ளில் நின்ற சீவனைத் தெரியுமே
தீர்த்தலிங்கம் உம்முளே தெளிந்து காண வல்லிரேல்
தீர்த்த லிங்கம் தான் அதாய்ச் சிறந்ததே சிவாயமே.

## தன்னை அறிதல் வேண்டும்

1. கருக்குழியில் ஆசையாய்க் காதலுற்று நிற்கிறீர்
குருக்கிடும் ஏழைகாள் குலாவுகின்ற பாவிகாள்
திருத்துருத்தி மெய்யினால் சிவந்த அஞ்செழுத்தையும்
உருக்கழிக்கும் உம்மையும் உணர்ந்துணர்ந்து கொள்ளுமே.

2. பேசுவானும் ஈசனே பிரமஞான உம்முளே
ஆசையான ஐவரும் அலைத்தலைகள் செய்கிறார்
ஆசையான ஐவரை அடக்கி ஓர் எழுத்திலே
பேசிடாது இருப்பிரேல் நாதன்வந்து பேசுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஓம்" என்ற பிரணவ எழுத்தே "சிவன்"
## அந்த மந்திரம் எல்லா நன்மைகளையும் அளிக்கும்

1. அவ்வுதித்த மந்திரம் அகாரமாய் உகாரமாய்
எவ்வெழுத்து அறிந்தவர்க்கு ஏழு பிறப்பது இங்கில்லை
சவ்வுதித்த மந்திரத்தை தற்பரத்து இருத்தினால்
அவ்வும், உவ்வும், மவ்வுமாய் அமர்ந்ததே சிவாயமே!

2. நமச்சிவாய அஞ்செழுத்தும் நல்குமேல் நிலைகளும்
நமச்சிவாய அஞ்சில் அஞ்சும் புராணமான மாயையும்
நமச்சிவாய அஞ்செழுத்து நம்முளே இருக்கவே
நமச்சிவாய உண்மையை நன்கு உரை செய் நாதனே.

## இறைவனின் மகிமை

1. பச்சைமண் பதுப்பிலே புழுப்பதிந்த வேட்டுவன்
நிச்சலும் நினைத்திட நினைந்த வண்ணம் ஆயிடும்
பச்சைமண் இடிந்துபோய் பறந்ததும்பி ஆயிடும்
பித்தர்காள் அறிந்துகொள் பிரான் இயற்று கோலமே!

2. அக்கரம் அனாதியோ ஆத்துமம் அனாதியோ
புக்கிருந்த பூதமும் புலன்களும் அனாதியோ
தர்க்கமிக்க நூல்களும் சாத்திரமும் அனாதியோ
தற்பரத்தை ஊடறுத்த சற்குரு அநாதியோ.

3. அகாரகாரணத்திலே அனேகனேக ரூபமாய்
உகாரகாரணத்திலே உருத்தரித்து நின்றனன்
மகார காரணத்திலே மயங்குகின்ற வையகம்
சிகாரகாரணத்திலே தெளிந்ததே சிவாயமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறப்பறுத்தல்
## முத்திநிலையடைதல்

1. எப்பிறப்பிலும் பிறந்து இறந்து அழிந்த ஏழைகாள்
இப்பிறப்பிலும் பிறந்து என்ன நீறு பூசுநீர்
அப்புடன் மலம் அறுத்து ஆசை நீக்க வல்லிரேல்
செப்பு நாத ஓசையில் தெளிந்து காணல் ஆகுமே.

2. அல்லல் வாசல் ஒன்பதும் அடைந்தடைந்த வாசலும்
சொல்லும் வாசல் ஓர் ஐந்தும் சொம்மி விம்மி நின்றது
நல்ல வாசலைத் திறந்து ஞானவாசல் ஊடுபோய்
எல்லைவாசல் கண்டவர் இனி பிறப்பது இல்லையே?

## ஞான நிலை

1. பாரடங்க உள்ளதும் பரந்தவானம் உள்ளதும்
ஓரிடமும் இன்றியே ஒன்றி நின்ற ஒன்சுடர்
ஆரிடமும் இன்றியே அகத்துளும் புறத்துளும்
சீரிடங்கள் கண்டவன் சிவன் தெரிந்த ஞானமே!

2. இல்லை இல்லை என்று நீர் இயம்புகின்ற ஏழைகாள்
இல்லை என்று நின்றதொன்றை இல்லை என்னலாகுமோ
இல்லை அல்ல ஒன்றுமல்ல இரண்டும் ஒன்றி நின்றதை
எல்லை கண்டு கொண்டபேர் இனி பிறப்பதில்லையே.

3. மின் எழுந்து மின்பரந்து மின்ஒடுங்குவாறு போல்
என்னுள் நின்ற என்னுள் ஈசன் என்னுள் அடங்குமே
கண்ணுள் நின்ற கண்ணின் நேர்மை கண் அறிவிலாமையால்
என்னுள் நின்ற, வென்னியானி யான் அறிந்தது இல்லையே!

4. சாவதான தத்துவச் சடங்கு செய்யும் ஊமைகாள்
தேவர் கல்லும் ஆவரோ சிரிப்பதன்றி என் செய்வேன்
மூவராலும் அறியயொண்ணா முக்கணன் முதற்கொழுந்து
காவலாக உம்முளே கலந்திருப்பன் காணுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வேணும் வேணும் என்றுநீர் வீண் உழன்று தேடுவீர்
வேணும் என்று தேடினாலும் உள்ளதல்லது இல்லையே
வேணும் என்று தேடுகின்ற வேட்கையைத் திறந்தபின்
வேணும் என்ற அப்பொருள் விரைந்து காணல் ஆகுமே.

6. சிட்டர் ஓதுவேதமும் சிறந்த ஆகமங்களும்
நட்ட காரணங்களும் நவின்ற மெய்மை நூல்களும்
கட்டி வைத்த போதகம் கதைக்குகந்த பித்தெலாம்
பொட்டதாய் முடிந்ததே பிரானை யான் அறிந்த பின்.

7. நட்ட தாவரங்களும் நவின்ற சாத்திரங்களும்
இட்டமான ஓமகுண்டம் இசைந்த நாலுவேதமும்
கட்டி வைத்த புத்தகம் கடும் பிதற்று இதற்கெலாம்
பொட்டதாய் முடிந்ததே பிரானை யான் அறியவே.

8. நீரிலே முளைத்தெழுந்த தாமரையின் ஓரிலை
நீரினோடு கூடி நின்றும் நீரிலாதவாறு போல்
பாரிலே முளைத்தெழுந்த பண்டிதப் பராபரம்
பாரிணோடு கூடிநின்ற பண்புகண்டு இருப்பீரே.

9. ஞான நூல்கள் தேடியே நவின்ற ஞானயோகிகள்
ஞானமான சோதியை நாடி உள் அறிகிலீர்
ஞானம் ஆகி நின்றதோர் நாதனை அறிந்தபின்
ஞானம் அல்லது இல்லை வேறு நாம் உரைத்தது உண்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தெழுத்து சிவாய நம

## பஞ்சாட்சரத்தின் மகிமை

1. வஞ்சகப் பிறவியை மனத்துளே விரும்பியே
அஞ்செழுத்தின் உண்மையை அறிவிலாத மாந்தர்கள்
வஞ்சகப் பிறவியை வதைத்திடவும் வல்லிரேல்
அஞ்செழுத்தின் உண்மையை அறிந்து கொள்ளலாகுமே.

2. இச்சகம் சனித்ததுவும் ஈசன் ஐந்து எழுத்திலே
மெச்சவும் சராசரங்கள் மேவும் ஐந்து எழுத்திலே
உச்சிதப் பல உயிர்கள் ஓங்கல் அஞ்செழுத்திலே
நிச்சயமெய்ஞ்ஞான போதம் நிற்கும் ஐந்தெழுத்திலே.

## இறைவனை அடையும் வழிகள்

தெளிந்தநற் சரியை தன்னில் சென்று சாலோகம் பெறும்
தெளிந்த நற் கிரியை பூசை சேரலாம் சாமீபமே
தெளிந்த நல்ல யோகம் தன்னில் சேரலாகும் சாரூபம்
தெளிந்த ஞானம் நான்கிலும் சேரலாம் சாயுச்சயமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. பாம்பாட்டிச் சித்தர்

"ஆடு பாம்பே" என்பது நம்மை உருவகப்படுத்துவதாகும். மனிதனைப் பாம்பாக உருவகப்படுத்தி கூறுகிறார்.

குறிப்பு : "நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பே" என்று தொடங்கும் பாட்டு மிக பிரசித்தமானது. அந்தப் பாடல் இந்த சித்தர் எழுதிய பாட்டாகும்.

### இறைவனின் மகிமையைக் கூறுதல்

1. தெளிந்து தெளிந்து தெளிந்து ஆடு பாம்பே! சிவன்
சீர்பாதங்கண்டு தெளிந்து ஆடு பாம்பே!
ஆடுபாம்பே! தெளிந்து ஆடு பாம்பே சிவன்
அடியினை கண்டோமென்று ஆடு பாம்பே!

2. நீடுபதம் நமக்கென்றுஞ் சொந்தம் என்றே
நித்தியம் என்றே பெரிய முத்தியென்றே
பாடுபடும்போதும் ஆதிபாதம் நினைந்தே
பன்னிப்பன்னி பரவி நின்று ஆடுபாம்பே!

3. எள்ளில் எண்ணெய் போலவுயிர் எங்கும் நிறைந்த
ஈசன்பத வாசமலர் எண்ணியெண்ணியே
உள்ளபடி அன்புபத்தி ஓங்கி நிற்கவே
ஒடுங்கி யடங்கித் தெளிந்து ஆடு பாம்பே!

4. அண்ட பிண்டம் தந்த எங்கள் ஆதிதேவனை
அகலாமலேநினைத்தே அன்புடன் பணிந்து
எண்திசையும் புகழ்ந்திட ஏத்தி மேத்தியே
ஏகமனமாக நாடி ஆடு பாம்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சோதிமயமான பரிசுத்தவத்துவைத்
தொழுதழு தலற்றித் தொந்தோம் எனவே
நீதி தவறா வழியில் நின்று நிலையாய்
நினைந்து நினைந்துருகி ஆடுபாம்பே!

6. அருவாயும் உருவாயும் அந்தியாயும்
அந்தமாயும் ஒளியாயும் ஆகமமாயும்
திருவாயும் குருவாயும் சீவனாயும்
செறிந்தவத் துவை போற்றி ஆடுபாம்பே!

7. சுட்டிக் காட்ட ஒண்ணாத பாழ்சூனியம் தன்னைச்
சூட்சமதியால் அறிந்து தோஷம் அறவே
எட்டிப் பிடித்தோ மென்றானந்த மாகப்பை
எடுத்து விரித்து நின்று ஆடு பாம்பே!

8. எவ்வுயிரும் எவ்வுலகும் ஈன்று புறம்பாய்
இருந்து திருவிளையாட்டு எய்தியும் பின்னர்
அவ்வுயிரும் அவ்வுலகும் ஆதியும் நின்ற
ஆனந்த வெள்ளங்கண்டு ஆடுபாம்பே!

### குருவணக்கம்

1. பொய் மதங்கள் போததனை செய் பொய் குருக்களைப்
புத்தி சொல்லி நன்னெறியில் போக விடுக்கும்
மெய்ம் மதந்தான் இன்னதென்று மேவ விளம்பும்
மெய்க் குருவின் பதம் போற்றி ஆடுபாம்பே!

2. வேதப்பொருள் இன்னதென்றும் வேதம் கடந்த
மெய்ப்பொருளைக் கண்டு மனம் மேவி விரும்பிப்
போதப் பொருள் இன்னதென்றும் போதனை செய்யும்
பூரண சற்குருதாள் கண்டு ஆடு பாம்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கற்பகாலம் கடந்தாதி கர்த்தாவோடும்
கடமழியாது வாழும் காரணக் குரு
பொற்பதமே தஞ்சமென்று போற்றுதல் செய்து
பூரண சிந்தையோடு ஆடுபாம்பே!

## பொருளாசை விலக்கம்

1. நாடு நகர் வீடுமாடு நற்பொருள் எல்லாம்
நடுவன் வரும்பொழுது நாடி வருமோ?
கூடுபோன பின்பு அவற்றால் கொள்பயன் என்னோ?
கூத்தன் பதங்குறித்து நின்று ஆடு பாம்பே!

2. யானை சேனை தேர்பரி யாவும் அணியாய்
யமன் வரும்போது துணையாமோ அறிவாய்:
ஞானம் சற்றும் இல்லாத நாய்கட் குப்புத்தி
நாடி வரும்படி நீ நின்று ஆடுபாம்பே!

3. மாணிக்கமா மணிமுடி வாகுவலயம்
மார்பில் தொங்கும் பதக்கங்கள் மற்றும் பணிகள்
ஆணிப்பொன் முத்தாரம் அப்பொன் அந்தக் கடகம்
அழிவான பொருளென நின்று ஆடுபாம்பே!

4. முக்கனியும் சர்க்கரையும் மோதகங்களும்
முதிர்சுவைப் பண்டங்களும் முந்தி உண்டவாய்
மிக்க உயிர் போனபின்பு மண்ணை விழுங்க
மெய்யாகக் கண்டோம் என்று ஆடுபாம்பே!

5. மக்கள் பெண்டிர் சுற்ற மரு மக்கள் மற்றவர்
மாளும் போதுகூட அவர் மாள்வதில்லையே
தக்கவுல கனைத்தையும் தந்த கர்த்தனைத்
தாவி தாவித் துதித்து நின்று ஆடுபாம்பே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கானலைமான் நீரெனவே கண்டு செல்லல்போல்
காசினிவாழ் வினைமூடர் கண்டுகளிப்பார்
மேனிலை கண்டார்கள் வீணாய் வீம்பு பேசிடார்
மெய்யன்பாதம் நடுவாரென்று ஆடுபாம்பே!

## பெண்ணாசை விலக்கல்

1. வெயில்கண்ட மஞ்சள் போன்ற மாதர் அழகை
விரும்பியே மேல்விழுந்து மேவு மாந்தர்
ஒயில்கண்டே இலவுகாத்து ஓடும் கிளிபோல்
உடல் போனால் ஓடுவாரென்று ஆடு பாம்பே!

2. வட்டமுலையென்று மிக வற்றுந்தோலை
மகமேரு என்று உவமை வைத்துக் கூறுவார்
கெட்ட நாற்றமுள்ள யோனிக் கேணியில் வீழ்ந்தார்
கெடுவர் என்றே நீர் துணிந்து ஆடுபாம்பே!

3. சிக்கு நாறும் கூந்தலையே செழுமை மேகமாய்ச்
செப்புவார்கள் கொங்கைதனைச் செப்புக்கொப்பதாய்
நெக்கு நெக்கு உருகிப் பெண்ணை நெஞ்சில் நினைப்பார்
நிமலனை நினையார் என்று ஆடுபாம்பே!

4. நாறிவரும் எச்சில்தனை நல்லமுதென்றும்
நண்ணுஞ்சளி நாசிதனை நற்குமிழ் என்றும்
கூறுவார்கள் புத்தியில்லா கூகை மாந்தர்கள்
கோன் நிலையை அறியார் என்று ஆடுபாம்பே!

5. மலக்குடம் மீதினிலே மஞ்சள் பூச்சென்றும்
மல்கும் புழுக்கூட்டின் மேல் வண்ணத்தோல் என்றும்
சலக்குழிக்குள்ளே நாற்றஞ் சார்ந்த சேறென்றும்
தான் அறிந்து தள்ளினோம் என்று ஆடு பாம்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித சரீரத்தின் குணம்

1. ஊத்தை குழிதனிலே மண்ணை எடுத்தே
உதிரப்பு னலினிலே உண்டை சேர்த்தே
வாய்த்த குயவனார் அவர் பண்ணும் பாண்டம்
வறையோட்டுக்கும் ஆகாதென்று ஆடுபாம்பே!

2. இருவர் மண் சேர்த்திட ஒருவர் பண்ண
ஈரைந்து மாதமாய் வைத்த சூளை
அருமையாய் இருப்பினும் அந்தச் சூளை
அரைக்காசுக்கு ஆகாதென்று ஆடுபாம்பே!

3. சீயுமல முஞ்செறி செந் நீரும் நிணமும்
சேர்ந்திடுதுர் நாற்றமுடைக் குடம் அது உடைந்தால்
நாயும் நரியும் பெரிய பேயுங் கழுகும்
நமதென்றே தின்றிடும் என்று ஆடுபாம்பே!

4. நீரில் எழும் நீர்க்குமிழி நிலைகெடல் போல
நில்லாது உடல் நீங்கிவிடும் நிச்சயம் என்றே
பாரிற்பல உயிர்களைப் படைத்த வன்தனைப்
பற்றவே நீ பற்றித் தொடர்ந்து ஆடுபாம்பே!

5. நாறுமீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்
நாளுங் கழுவினும் அதன் நாற்றம் போமோ?
கூறும் உடல் பல நதி யாடிக் கொண்டதால்
கொண்ட மலம் நீங்காதென்று ஆடுபாம்பே!

6. காய்த்த மரம் அது கல்லடி படும்
கன்ம வினை கொண்ட காயம் கண்டனை பெறும்;
வாய்த்த தவம் உடையவர் வாழ்பவர் என்றே
வத்துத் திருவடி தொழுது ஆடுபாம்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மரப்பாவை போலவொரு மண்ணுருச்செய்து
வளமான சீவன் என்னுஞ் சூத்திரம் மாட்டித்
திரைக்குள் இருந்தசைப்போன் தீர்ந்த பொழுதே
தேகம் விழும் என்று தெளிந்து ஆடுபாம்பே!

### *அகப்பற்று நீங்கல்*

1. தாமரையின் இலையிலே தண்ணீர் தங்காத
தன்மைபோலச் சகத்தாசை தள்ளி விட்டெங்கும்
தூமணியாய் விளங்கிய சோதி பதத்தைத்
தொழுது தொழுது தொழுது ஆடு பாம்பே!

2. கள்ளங்கொலை காமமாதி கண்டித்ததெல்லாம்
கட்டறுத்து விட்டு ஞானக் கண்ணைத் திறந்து
தெளிதான வெட்ட வெளி சிற் சொரூபத்தைத்
தேர்ந்து பார்த்துச் சிந்தை தெளிந்து ஆடுபாம்பே!

3. சேற்றில்திரி பிள்ளைப் பூச்சி சேற்றை நீக்கல்போல்
தேசத்தோடு ஒத்துவாழ்வார் செய்கை கண்டபின்
சாற்றுபர வெளிதனைச் சாரும் வழியே
தானடக்க வேணுமென்று ஆடுபாம்பே!

4. எண்ணெய்க்குந் தண்ணீர்க்குந் தொந்தம் இல்லாதவாறு போல்
எப்போதும் இப்புவியில் எய்த வேண்டும்
கண்ணுக்கு கண்ணானவொளி கண்டு கொள்ளவே
கட்டறுத்து வாழ்ந்திட நின்று ஆடுபாம்பே!

5. கக்கிவிட்ட சோறுகறி கந்தமூலங்கள்
கண்களுக்கு சுத்தமான காட்சிபோலவே
சிக்கிக்கொண்ட சகத்தினைச் சீயென றொறுத்துச்
சீர்பாதங் காணத்தெளிந்து ஆடுபாம்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மனமென்னும் குதிரையை வாகனமாக்கி
மதியென்னும் கடிவாளம் வாயினில் பூட்டிச்
சினமென்னும் சீனியின் மேற்சீராய் ஏறித்
தெளிவிடம் சாரிவிட்டு ஆடுபாம்பே!

7. ஆசையென்னுஞ் செருப்பின் மேல் அடியை வைத்தே
ஆங்கார முட்காட்டை அறவே மிதித்தே
காசையென்னுந் துர்க்குணத்தில் கனலைக் கொளுத்திக்
காலா காலங்கடந்தோம் என்று ஆடுபாம்பே!

8. தூக்கிய நற்பாதங் கண்டேன் சோதியுங் கண்டேன்
சுத்த வெளிக்குள்ளேயொரு கூத்தனைக் கண்டேன்
தாக்கிய சிரசின் மேல் தைத்தபாதம்
சற்குருவின் பாதம் என்று ஆடுபாம்பே!

## தன்னையறிதல் வேண்டும்

1. தன்னையறிந்து ஒழுகுவோர் தன்னை மறைப்பார்
தன்னையறியாதவரே தன்னை காட்டுவார்
பின்னையொரு கடவுளை பேண நினையார்
பேரொளியைப் பேணுவார் என்று ஆடுபாம்பே!

2. எண்ணரிய புண்ணியங்கள் எல்லாம் செய்தும் என்
ஏகன் அடி நெஞ்சமதில் எண்ணாவிடிலே?
பண்ணரிய தவப்பயன் பத்தி இல்லையேல்
பாழ்படும் என்று துணிந்து ஆடுபாம்பே!

## சித்தர் பெருமை

1. கண்டவர்கள் ஒரு காலும் விண்டிடார்களே
விண்டவர்கள் ஒருகாலும் கண்டிடார்களே!
கொண்டகோலம் உள்ளவர்கள் கோன்நிலை காணார்
கூத்தாடிக் கூத்தாடியே நீ ஆடுபாம்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *பிறப்பைத் தவிர்த்தல்*

1. பிறப்பையும் இறப்பையும் அறுத்து விடயான்
பெருமருந்து ஒன்று சொல்வேன் பெட்புடன் கேளாய்;
திறப்புடன் மனப்பூட்டுஞ் சிந்தைக்கதவும்
திறந்திடும் வகையறிந்து ஆடுபாம்பே!

2. இறந்தவர் ஐயர். அவர் இட்டமானவர்
எய்தும் அவர் இறந்தார் என்று எல்லாவர்க்குஞ் சொல்;
மறந்தவர் ஒருவர் என்றே மண்ணிலே உள்ளோர்
வகையறிந்திடவே நின்று ஆடுபாம்பே!

3. ஆகாரமுதலிலே பாம்பதாக
ஆனந்த வயலிலே படம் விரித்தே
ஊகார முதலிலே யொத்து ஒடுங்கி
ஓடி வகாரத்தின் நாவை நீட்டி
சீகாரங் கிடந்தோர் மந்திரத்தைச்
மாகாரப் பிறப்பையும் வேர் அறுத்து
மாயபந்தம் கடந்தோம் என்று ஆடு பாம்பே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருமூலர் அருளிய

# திருமந்திரம்

**திருச்சிற்றம்பலம்**

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்(கு) இன்னுரை தானே.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்மை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்(பு) ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே.

படமாடக் கோயிற் பகவற்கொன்(று) ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங்(கு) ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன்(று) ஈயில்
படமாடக் கோயிற் பகவற்க தாமே.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும் கதியில்லை நும் சித்தர்க்கு
நின்றே நிலைபெற நீர் நினைந்(து) உய்மினே.

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையம் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருக்குறள்

## பாட்டும் பொருளும்

### <u>அதிகாரம் : நீத்தார் பெருமை</u>

1. **ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
   **வேண்டும் பனுவல் துணிவு.**

ஒழுக்கத்தில் உறுதியான துறவிகளின் பெருமை, சான்றோர் நூலில் விருப்பமுடனும், உயர்வாகவும் இடம்பெறும்.

2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
   இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

உலகில் இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று கூறமுடியுமா? அதுபோலத்தான் உண்மையாகவே பற்றுகளைத் துறந்த உத்தமர்களின் பெருமையையும் அளவிடவே முடியாது.

3. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
   பெருமை பிறங்கிற் றுலகு.

நன்மை எது, தீமை எது? என்பதை ஆய்ந்தறிந்து நன்மைகளை மேற்கொள்பவர்களே உலகில் பெருமைக்குரியவர்களாவார்கள்.

4. உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
   வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

உறுதியென்ற அங்குசம் கொண்டு, ஐம்பொறிகளையும் அடக்கிக் காப்பவன், துறவறம் எனும் நிலத்திற்கு ஏற்ற விதையாவான்.

5. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
   இந்திரனே சாலுங் கரி.

புலன்களை அடக்க முடியாமல் வழிதவறிச் சென்றிடும் மனிதனுக்குச் சான்றாக இந்திரன் விளங்கி, ஐம்புலன்களால் ஏற்படும் ஆசைகளைக் கட்டுப்படுத்தியதால் வான்புகழ் கொண்டவர்களின் ஆற்றலை எடுத்துக் காட்டுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

பெருமை தரும் செயல்களைப் புரிவோரைப் பெரியோர் என்றும், சிறுமையான செயல்களையன்றிப் பெருமைக்குரிய செயல்களைச் செய்யாதவர்களைச் சிறியோர் என்றும் வரையறுத்து விட முடியும்.

7. சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

ஐம்புலன்களின் இயல்பை உணர்ந்து அவற்றை அடக்கியாளும் திறன் கொண்டவனையே உலகம் போற்றும்.

8. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்

சான்றோர்களின் பெருமையை இந்த உலகில் அழியாமல் நிலைத்து நின்றும் அவர்களது அறவழி நூல்களே எடுத்துக்காட்டும்.

9. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது.

குணக்குன்றுகளான பெரியவர்கள் கோபம் கொண்டால் அந்தக் கோபம் அவர்கள் உள்ளத்தில் ஒரு கணம் கூட நிலைத்து நிற்காது.

10. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு கொண்டு அருள் பொழியும் சான்றோர் எவராயினும் அவர் அந்தணர் எனப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் : நிலையாமை

1. நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

நிலையற்றவைகளை நிலையானவை என நம்புகின்ற அறியாமை மிக இழிவானதாகும்.

2. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

சேர்த்து வைத்த பணமும் சொத்தும் ஒருவரை விட்டுப் போவது, கூத்து முடிந்ததும் மக்கள் அரங்கத்தை விட்டுக்கலைந்து செல்வதைப் போன்றதாகும்.

3. அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

நம்மை வந்தடையும் செல்வம் நிலையற்றது என்பதை உணர்ந்து அதைக்கொண்டு அப்பொழுதே நிலையான நற்செயல்களில் ஈடுபட வேண்டும்.

4. நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

வாழ்க்கையைப் பற்றி உணர்ந்தவர்கள், நாள் என்பது ஒருவரின் ஆயுளை அறுத்துக் குறைத்துக் கொண்டேயிருக்கும் வாள் என்று அறிவார்கள்.

5. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து நம் உயிர் இருக்கும்போதே உயர்ந்த நற்பணிகளை ஆற்றிட முனைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

இந்த உலகமானது நேற்று உயிருடன் இருந்தவரை இன்று இல்லாமல் செய்து விட்டோம் என்று அகந்தையைப் பெருமையாகக் கொண்டதாகும்.

7. ஒரு பொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

ஒரு பொழுதுகூட வாழ்க்கையைப் பற்றிய உண்மையைச் சிந்தித்து அறியாதவர்களே, ஆசைக்கோர் அளவின்றி மனக் கோட்டைகள் கட்டுவார்கள்.

8. குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவு முட்டைக்கும் பறவைக் குஞ்சுக்கும் உண்டான உறவு போன்றதுதான்.

9. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

நிலையற்ற வாழ்க்கையில் உறக்கத்திற்குப் பிறகு விழிப்பதைப் போன்றது பிறப்பு; திரும்ப விழிக்க முடியாதத மீளா உறக்கம் கொள்வதே இறப்பு;

10. புக்கி லமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சி லிருந்த உயிர்க்கு.

உடலுடன் தங்கியுள்ள உயிருக்கு அதனைப் பிரிந்தால் வேறு புகலிடம் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆன்ம விழிப்பிற்காக .....**
**உச்சி திறக்கட்டும் உயர்வு பிறக்கட்டும்**

**நான் உடல் அல்ல**
**நான் மானம் அல்ல**
**நான் உயிர் அல்ல**
**நான் பிரம்மம்**

ஆகாயம் நிரந்தரமானது வெண்மேகம் தோன்றி மறைவது
கடல் நிரந்தரமானது ஆறுகள் தோன்றி மறைவது
ஆனந்தம் நிரந்தரமானது இன்பதுன்பங்கள் தோன்றி மறைவது
இந்த கணம் நிரந்தரமானது மனமும் எண்ணங்களும் தோன்றி
மறைவது

வழிமுறை தேவையில்லாத தெரிநிலை தியானம்
மனதின் செயற்பாடுகளையும் புரிந்து கொள்ளல் தியானம்
ஒப்பிட எதுவும் கிடையாத மனதை கடந்து பறந்து தியானம்
ஆன்மாவில் உணர் நிலை எழுப்பல் தியானம்

நின்றால் வெளி அசைந்தால் வளி
சித்தம் சிறிதசைய சம்சாரம்
சித்தம் நிலைத்து நிற்க முத்தி சித்தமிது
சீவனும் அசைவற்று நின்றால் சிவம்

இருமை நிலை கடப்பது ராஜ நோக்கு
விழிப்புணர்வு ராஜ மார்க்கம்
வெறுமையை பற்றி நிற்பது ராஜ யோகம்
திருச்சிற்றம்பலம் ராஜரகசியம்

இலட்சியம் விட்டால் யோகம் போச்சு
குண்டலினி விட்டால் அஷ்ட சித்தி போச்சு
மனம்விட்டால் ஞானம் போச்சு
வாசி விட்டால் தேகம் போச்சு

கண்கள் காணாத போது செவிகள் கேளாத போது
மனம்அறியாத போது ஆத்மா செயல்படுகிறது
உடலில் எல்லையில்லா ஆனந்தம் பொங்குகிறது
பேரின்ப பெருவாழ்வு மலர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளும் நானும்

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்
அன்பெனப்படுவது யாதெனக்கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்
பாசம் என்பது யாதெனக்கெட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
மனையால் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன பணித்தான்
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்

அனுபவித்தே தான் அறிவது வாழ்க்கை எனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் அருகே நெருங்கி
அனுபவம் என்பதே
நான் தான் என்றான்

கவியரசர் கண்ணதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு :
1939
.
04
.
21



இறப்பு :
2019
.
03
.
29

அமரர்

## பத்மநாதன் அன்னலட்சுமி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
மண்ணுலகை விட்டுப் பிரிந்தாலும்
காலங்கள் பல கடந்து சென்றாலும்
கொண்ட கோலங்கள் நிலை மாறிப்போனாலும்
காலத்தால் அழியாதது உங்கள் ஞாபகங்கள்
பிறப்போடு இறப்பும் இணைந்தது
எனினும் உங்கள் இழப்பை ஏனோ
நெஞ்சம் ஏற்க மறுக்கிறதே .....

உங்கள் சிரித்தமுகமும் அன்பான வார்த்தைகளும் கண்டு
நாம் மகிழ்ச்சியடைந்தோமே
"அன்னக்கா" என்று இனியாரை நாம் அழைப்போம்
இனி நாம் எப் பிறவியில் உனைக் காண்போம் நாம் ஏங்கித் தவிக்கிறோம்
அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயருடன்
**அயலவர்கள்**

மோகா பதிப்பகம். 021 221 7939



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு :
**1939.04.21**

இறப்பு :
**2019.03.29**

அமரர்
**பத்மநாதன் அன்னலட்சுமி**

நாம் பேசிய மழலை மொழி
அம்மம்மா எனும் சொல்லே எம் வாழ்வின்
வழிகாட்டியே அம்மம்மா எங்கள்
வாழ்க்கை உங்களால் ஒளி வீசுகிறது
அம்மம்மா உங்கள் ஆசைப்படி மென்மேலும்
உயர்ந்து வாழ்வோம் - இனி
நாம் யாரை அழைப்போம் அம்மம்மா என்று
எம்மை தவிக்கவிட்டுச் சென்றது ஏனோ...


அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயருடன் :
**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையதேவர் குடும்பம்




( ★ இக் குறியீடு அமரர்களைக் குறிக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

நினைவில் நீங்கள்!

எங்கள் குடும்பத்தின் அணையாச்சுடர் அன்புத் தெய்வம்

திருமதி. பத்மநாதன் அன்னலட்சுமி

உடல்நலிவுற்று வைத்தியசாலையில்

அனுமதிக்கப்பட்டிருந்தபோது பல வழிகளில் உதவி புரிந்த

தனியார் வைத்திய அதிகாரிகள், தாதிகள், ஊழியர்களுக்கும்

சாய்ந்தவுடன் ஆன்மா இறைபதம் சேர்ந்ததெனக் கேள்வியுற்று

ஓடிவந்து உதவியவர்கள், மனப்பதற்றத்தை தணித்தவர்கள்,

ஓடோடி வந்து ஆறுதலும் தேறுதலும் கூறியவர்களுக்கும்

தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபச் செய்திகளை

அனுப்பி ஆறுதல் தந்தவர்களுக்கும்

உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து ஆறுதல் கூறிய

உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும்

அந்தியேட்டி, வீட்டுக்கிரியை, ஆத்மசாந்திப்பிரார்த்தனைகளில்

கலந்து கொண்டவர்களுக்கும்

இவ் நினைவுக்களஞ்சியத்தை அழகுற பிரசுரிக்க உதவிய

ஷாம்பவி பதிப்பகத்தினர்க்கும் மற்றும்

பல்வேறு வழிகளில் எம்முடன் சேர்ந்து

உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும்

உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும்

எங்கள் குடும்பத்தின் நினைவில் நீங்காது இருந்திடும்

நீங்கா நன்றிகள்.

இல.103/1, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org